TAMIL NA[DU] ... 3 MAY ... MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987 ஏப்ரல் 7, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 24, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு".

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயமாலேயே அச் செயல் தானே நிறைவேறும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம்.

44—(*வினா எண் 8970) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமசசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு இப்பணி 31—8—1986 அன்று முடிவடைந்துள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடைப் பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால், அந்த மைதானம் அமைக்கும்போதே அதற்கு மின் விளக்குகள் பொருத்திய நிலை வேண்டுமென்று ஏற்கனவே கேட்கப்பட்டது. மாலை நேரத்தில் தான் விளையாட முடியும். ஆகவே, மின் விளக்கு வசதிகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இன்னும் அந்தப் பணி நடைபெறவில்லை. எனவே, மின் விளக்கு பொருத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ரூ. 89,005 மதிப்பீட்டுச் செலவில் ஒளி விளக்கு பொருத்துவதற்காக சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அந்த விளையாட்டுக் குழு நண்பர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே கைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே கேட்கப்பட்டது. எனவே அந்தக் கைப்பந்து விளையாட்டு மைதானத்தையும் அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நன்றிக்கு நன்றி. இது கூடைப் பந்து பற்றிய கேள்வி. கைப் பந்து பற்றி தனியாகக் கேள்வி போடவும்.

இராமநாதபுரம் ஏர்வாடி தர்கா.

45—(*வினா எண் 9101)—டாக்டர் த. முகமது சலீம் மற்றும் திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி கிராமத்தில் பல மதத்தினரும் வணங்கும் ஏர்வாடி தர்கா இருப்பதால், ஏர்வாடியை நகரியமாக எடுத்து சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?